சுபாஷ் முக்யோபாத்யாய்

29806

# நான் போகும் இடமெல்லாம்...

சாகித்திய அக்காதெமி
பரிசு பெற்ற
வங்கக் கவிதைகள்

தமிழாக்கம் : இன்குலாப்

நான் போகும் இடமெல்லாம் ...

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம், புதுதில்லி.)

# நான் போகும் இடமெல்லாம்...

(சாகித்திய அக்காதெமி பரிசு பெற்ற வங்கக் கவிதைகள்)

சுபாஷ் முக்யோபாத்யாய்

தமிழாக்கம்
இன்குலாப்

சாகித்திய அக்காதெமி

'Naan Pogum Idamellam... Tamil translation by Inqulab of Subhas Mukhopadhyay's Akademi Award winning Bengali Poems entitled *'Yata Durai Jai'.* Sahitya Akademi, New Delhi 2000 Rs. 50.

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு : 2000
ISBN - 81-260-0838-5

**சாகித்திய அக்காதெமி**

தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35 பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110 001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் - 560 001.

'குணா பில்டிங்' 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

விலை ரூ. 50/-

அச்சிட்டோர் :எமரல்ட் அச்சகம், சென்னை - 600 029

# உள்ளடக்கம்


தமிழ் மொழிபெயர்ப்பு பற்றி / 7

மேநாள் கவிதை / 11

இங்கே / 13

தனியே நிற்காதே (பிரிவு - 6) / 16

நல்வரவு / 17

ஒரு முகத்தைத் தேடுகிறேன் / 20

வந்து கொண்டிருக்கிறேன் / 22

சல்மானின் தாய் / 23

நீ எப்பொழுது அழகாய்த் தோன்றினாய் / 24

நாம் கடலை நோக்கிப் போவோம் / 25

இன்னொரு குழந்தை / 26

மலர்கள் மலரலாம் மலராமல் போகலாம் / 28

பிரிந்து செல்கிறது பிறிதொரு நாள் / 30

இப்போதைய சிந்தனை (பிரிவு - 2) / 31

என் காலடியைத் தொடர்பவன் / 32

படிஞாயிறு / 34

நான் போகுமிடமெல்லாம் / 35

ஏன் இன்னும் அவர் வீடு திரும்பவில்லை / 36

தாய்-தாய்நாடு / 38

என்னைக் கவிஞன் என்றழைக்காதே / 40

சும்மா மூக்கை நுழைப்பவர்கள் / 41

பழைய தலைமுறை / 42

புதிய தலைமுறை (பிரிவு - 1) / 44

என்னைத்தனியே விடு / 45

வெட்கம், வெட்கம் / 46

மழை வரட்டும் (பிரிவு - 1) / 47

தயவு செய்து வழிவிடுங்கள் / 48

சிறை வாழ்க்கை நினைவுகள் / 49

என் மகன் என்னைவிட்டுப் போய்விட்டான் (பகுதி - 2) / 51

ஊமைக்குயில் / 54

இப்படித்தான் இருக்க வேண்டும் / 55

கயிறிழுப்புப் போட்டி / 57

ஒரு கிழவி / 58

முழங்கால் அளவுத் தண்ணீரில் / 60

சிரிக்கும் கழுதைப்புலி / 61

காத்திருந்து / 63

என்ன விளையாட்டு / 64

ஒரு கறுத்த செய்தியாளன் / 65

சுவடு இல்லை / 66

ஓர் அழைப்புக்காகக் காத்திருக்கிறேன் / 67

ஓ! இறைவா / 68

# தமிழ் மொழிபெயர்ப்பு குறித்துச் சில சொற்கள்

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, கட்சி அறிக்கைகளையும் இலக்கியங்களையும் மொழி பெயர்த்த அனுபவம் உண்டு. சில சிறுகதைகள், நிறையக் கவிதைகள் என்று மொழிபெயர்த்திருக் கிறேன். என் சொந்தப் படைப்பு முயற்சிகள் பாதிக்கப்படும் என்கிற அச்சத்தால், மொழிபெயர்ப்பு வேலைகளைப் பெரிதும் நிறுத்தி இருந்தேன். இதனால் சொந்தப் படைப்புகளை அதிகம் கொண்டு வந்து விடவும் இல்லை. பிறகு, பிற மொழியில் வந்த நல்ல கவிதைகளை ஆங்கிலத்தில் படிக்க நேர்ந்த பொழுது, அதைத் தமிழில் தராததைப் பெருங்குறையாகவும் உணர்ந்தேன்.

சுபாஷ் முக்யோபாத்யாவின், ''நான் போகும் இடமெல்லாம்.'' கவிதைத் தொகுப்பைத் தமிழில் தருவது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதனால் என் மனக்குறை தணிகிறது. இதனை சுனில் காந்தி சென்னின் ஆங்கில மொழிபெயர்ப்பின் வழியாகத் தமிழில் தருகிறேன். மிக நுட்பமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட இக் கவிதைகளைப் படிக்க நேர்ந்த பொழுது வங்க மொழியைப் பயின்றிருக்க வேண்டும், என்ற ஓர் ஏக்க உணர்வு என் மனத்தைச் சூழ்ந்தது. ஆனால் தமிழ் நாட்டில் இந்தியைத் தவிரப் பிற வட மாநில மொழிகளைத் தனி நிறுவனங்கள் மூலமாகப் பயிலும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

சுபாஷ் ஒரு தனித்துவமிக்க கவிஞர் என்று சுனில் காந்தி சென் கூறுகிறார். மிக இளம் வயதில் வங்க இலக்கிய வட்டத்தில் ஒரு புயல்போலப் புகுந்தவர் சுபாஷ். சுனில் காந்தி சென், சுபாஷின் கவிதை மொழி ஆற்றலைப் பாராட்டியும் சொல்கிறார். ''சுபாஷ் பேசும் மொழியானது எனது இதயத்துக்கு நெருங்கியதாக இருக் கிறது. ஏனெனில் நமது மொழியின் வேர்கள் எல்லாம் அப்படிப் பட்டவைதாம்... அவர் பயன்படுத்தும் தொடர்கள் கிளர்ச்சியூட்டு கின்றன. அவற்றின் புத்தமைப்பை உடனடியாகப் புரிந்து கொண்ட

போதிலும், அவற்றை மொழி பெயர்த்து வழங்குவதில் எனது ஆங்கிலம் தோற்றுப் போகிறது. இத் தொடர்களின் முழுச் செழுமை யை அயல் மொழிப் படிப்பாளிகளுக்கு வழங்குவது பெரும்பாலும் எளிமையாக இல்லை.''

எனினும் சுனில் காந்தி சென்னின் மொழி பெயர்ப்பு சுபாஷின் கவியுள்ளத்தைக் காட்ட முயல்கிறது என்றே நம்புகிறேன்.

*ஒருநாள் கண்காணிப்புக்குப் பிறகு,*
*களைத்துப் போன கண்களுடன்*
*ஞாயிறு*
*தனது பெருஞ் சிறகுகளை*
*இருண்ட குன்றுகளின் மீது விரிக்கும்.*

*குழாயிலிருந்து தண்ணீர் சொட்டுகிறது*
*மற்றொரு இருண்ட காலைப் பொழுது*
*புகையின் சவத்துணி உடுத்திப்*
*பாத்திரத் தண்ணீரில் எதிரொளிக்கும்*
*தனது முகத்தைப் பார்த்துக் கொள்ளும்.*

*பெருங்கண் வானுக்கடியில்*
*கூழாங்கற்களை உருட்டிச்*
*சுழித்தோடும் நதியின்*
*குதலைச் சொற்களைச்*
*சொட்டும் தண்ணீரில் கேட்கிறேன்.*

இப்படி அழகும் கவிதையும் ததும்பும் வரிகளை, ஆங்கிலத்திலேயே அவரால் அடையாளம் காட்ட முடிகிறது.

இதனுடைய ஆங்கில மொழி பெயர்ப்பிலும் வங்க மண்ணின் மணத்தை முகர முடிகிறது. சுபாஷ், வங்காளத்தின் நகர்ப்புற, கிராமப் புற வாழ்க்கையை நுட்பமாகச் சித்தரிப்பதில் வல்லவர் என்பதை மொழிபெயர்ப்பின் ஊடே புரிந்து கொள்ளலாம். சிசூசி (ஒரு வகைத் தேக்குமரம்) சஜினா (முருங்கை) போன்ற மரங்களின் வங்க மொழிப் பெயர்களே ஆங்கில மொழி பெயர்ப்பிலும் இடம் பெற்றுள்ளன. பிளாக் மரியா (கைதிகளை ஏற்றிச் செல்லும் கறுப்பு வாகனம்) என்ற தொடர் என்னை மருட்டியது. காவலருடன் வரும் பிண வாகனம் என்று நினைத்தேன். இலயோலா கல்லூரியில் காட்சித் தொடர்புத் துறைப் பேராசிரியர். தந்தை, ராஜநாயகம், இத்தொடர்களின் பொருளை வங்காள மாணவர்களிடம் கேட்டு எனக்குத் தமிழில் சொன்னார். அவருக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இக்கவிதைகளை விடுநிலைப்பா (Freeverse) நடையிலேயே தமிழில் தருகிறேன். ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்புகளில், வங்க மொழியின் சந்த நடை தொலைந்து போயிருக்கலாம். அம்மொழி யின் சந்தம் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது.

ஆனால் கருத்து, கவிதையாகத் தொடங்கும் ஓசையை என்னால் கேட்க முடிந்தது. அந்த இடத்தில் நின்றே இக்கவிதை வரிகளைத் தமிழோசையில் தர முயல்கிறேன். அழகும் வீறுணர்வும் நிறைந்த இக்கவிதைகளைக் கூடிய மட்டும் எளிமையாகத் தர முயன்றுள்ளேன். 'உறைநீத்த ஒளிறுவாள்', 'பெருங்கண்வான்', 'நீல விசும்பிடை உன்முகம்' போன்ற தொடர்களில் முன்னைச் சொல் லாட்சிகளை நினைவுபடுத்தும் வாய்ப்பை இக்கவிதைகள் எனக்கு வழங்கின.

இம்மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட சில ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்திய ஆங்கிலத்துறை பேராசிரியர் ஹாதி அலி, கவிஞர் ஈரோடு தமிழன்பன், திரைப்பட இயக்குநர் ரபி ஆகியோருக்கு என் நன்றி. இம்மொழிபெயர்ப்பின் இறுதிப்படியை வரிவரியாகப் படித்துத் திருத்தம் செய்த தோழர் அ. மங்கை அவர்களுக்கும் நன்றி. குறிப்பாக மொழிபெயர்க்கும் வாய்ப்பை நல்கிய சாகித்திய அகாதெமிக்கு என் நன்றி.

**இன்குலாப்**

**மே 1999**
சென்னை - 600 014.

# மேநாள் கவிதை

அன்பே
மலர்களுடன் பொழுதுபோக்கி
மகிழும் நாள் இதுவல்ல

முகத்துக்கு நேரே பேரழிவு நம்மை
உற்று நோக்குகிறது

கனவின் மதுவண்ணத்தில்
கனத்திருக்காது
இனியும் நமது கண்கள்

உச்சிக் கூண்டுகளிலிருந்து
சங்கு அலறுகிறது

அரிவாள் சுத்தியலிலிருந்து
புதுப்பாடல் ஒன்று
ஒலிக்கிறது
ஆண்கள் பெண்கள் கணக்கற்றோர்
மெதுவாய் வரும்
இரக்கமற்ற மரணத்தை
எதிர்கொள்கிறார்கள்
வாழ்க்கையை நேசிக்கவும்
விழைகிறார்கள்.

ஊனமுற்றோர்பால்
உன் அன்பைச் செலுத்து
ஒடுக்குமுறையாளனை எதிர்த்து
இறுதிவரை போராடச்
சூளுரை
தளைகள் நொறுங்கும்

நமது விழிப்புணர்வுப் பாடலின்
அடிவானத்தில்
ஒளிமயமான நாள் ஒன்று
விடிகிறது.

ஆண்டாண்டு காலம்
அடக்கப்பட்ட
ஏழைகளின் கூக்குரல்
மூச்சு ஒவ்வொன்றையும் வெட்கமுறச் செய்கிறது.

சாவுக்கு அஞ்சி
முதுகு காட்டி
உட்காராதே
இறுதிப்போரை எதிர்கொள்ள
அணிந்து கொள்
உன்
கவச ஆடையை

அன்பே
மலர்களுடன் பொழுது போக்கி
மகிழும்நாள் இதுவல்ல

சாவின் செய்தி வந்துவிட்டது
ஒழுங்கற்ற கால நிலையின் இருண்மையில்
நமது பாதை
தெளிவற்றதாய்த் தெரியலாம்

சரியான பாதையைக் கண்டறியும்
இளைஞர் ஆன்மா.

# இங்கே

நரைபடிந்த நகரவாழ்க்கையை விடுத்து
அசன்சால் செல்ல
தேர்வு செய்தேன் -
ஒரு விரைவு வண்டியை
இப்பொழுது நான் இங்கே!

சிறுகுன்றுகளில் சரிகிறது வானம்
உச்சிப் புகைக் கூண்டுகளின்
வரிசைக்குக் கீழே
சுற்றிலும் விரியும் நெல்வயல்கள்,
கொல்லுப்பட்டறையில்
கூர்மைப்படுத்தப்படும்
அரிவாள்களின் சரசரப்பை
கதிர்க் காதுகளால்
கவனிக்கின்றனவா?

அலைபாயும் நெடுவெளிகள்
பொட்டல் காடுகளில்
போய் முடியும்;
புல்லின் மெல்லிதழ்கள்
பனித்துளிகளில் ஒளிவீசும்;
மணல்வெளி வழியாகச்
சிற்றோடை ஒன்று வளையும்,
தனக்குப் பின்னால்
ஒளித்தடத்தை வரைந்து
இறுதியாய்
ஒரு பெருமூச்சுவிடும்

இங்கும் அங்கும்
தனித்தனி வயல்கள்
கம்பி வேலிகள்
வில்போல் வளைந்த தொடுவானம் நோக்கி
முடிந்து போகும்
இருப்புப் பாதை

ஒருநாள் கண்காணிப்புக்குப் பிறகு
களைத்துப் போன கண்களுடன்
ஞாயிறு
தனது பெருஞ்சிறகுகளை
இருண்ட குன்றுகளின்மீது விரிக்கும்.

கள்ளுக் கடைகள் திறந்திருக்கும்
சாலைகளில், சரிந்தபடி
மனிதர்கள் கூட்டம்
கள்ளு மொந்தைகளின் போதையில்,
அரட்டை அடிக்கும்
ஆண்கள், பெண்கள்,
கள்ளுப் பழக்கம் அவர்களில் சிலரின்
கடைசிக் காசையும் களவாடும்.

நெடுங்காலத்திற்கு முன்னரே
மறந்துபோன -
சிற்றூரையும், பழங்குடில்களையும்
இன்னும் அவர்கள்
நினைவுகூர்கின்றார்களா?

நெடுந்தொலைவில்
வயல்வெளிகளைச் சீராட்ட
நின்று கொண்டிருக்கும் தேக்குமரம்
பார்க்கப் புதுவதன்று
எனினும்
கனவை நெய்வதாய்த் தோன்றும்

நான் விட்டுவிட்டு வந்த நகரவாழ்க்கையின்
திரைப்படப் படிமங்களின் புகலிடத்தில்
மகிழ்ச்சியாய் இருப்பதாய்
அரைகுறை மனதுடன்
நினைக்கத் தொடங்கினேன்.

# தனியே நிற்காதே
(பிரிவு - 6)

பலத்த காற்று நம் முதுகை விளாசும்
வானம் உறுமுகிறது
அமைதி மடிந்து நெடுநாளாகிறது

தொலைவிலிருந்தும் அருகிலிருந்தும்
நகரங்களிலும் சிற்றூர்களிலும்
பல்வேறு குரல்கள் ஒலிப்பதைக் கேட்கிறேன்,
பாதி விளங்கியபடி
என் இதயத்தை மெதுவாகத் தூண்டியபடி.

தனித்திருக்கவில்லை நாம்
மக்கள் இணைகிறார்கள் நம்முடன்
நமது புதிய மீட்பர்கள்
உழவர்கள் தொழிலாளர்களுடன்
தாக்குதலுக்குத் தயாராகிறார்கள்.
விடிகிறது
புதிய வாழ்க்கை ஒன்று.

கவிஞனே வா...
நாமும் போகலாம்
ஊர்வலத்தில் பங்கேற்போம்
புனிதமற்ற சாமிமார்கள்
மணற்கோட்டை கட்டுகிறார்கள்
நரகத்திற்குப் பாதை போடுகிறார்கள்.

ஊமைகள் கண்டறிவார்கள்
தங்கள் குரலை
முடவர்கள் நடப்பார்கள்
அழகாய்

நூறாயிரம் நெஞ்சங்களில்
விலைமதிப்பற்ற சுரங்கங்கள்
ஒளித்து வைக்கப்பட்டுள்ளன.
மலர்மொட்டுகளில் சிறைப்பட்டுள்ளது
நறுமணம்.
இந்தப் புயற் பிரளயத்தால்
நாம்
குருடாகி விடவில்லை.

# நல்வரவு

நகரங்களைச் சேர்ந்தனர் சிற்றூர் மக்கள்
வெறுமையடைந்தன
குடில்களும்
தானியக் குதிர்களும்.
விதைக்கப்பட்ட நெல்வயல்கள்
வீணே கைவிடப்பட்டன.

சருகுகள் உதிர்ந்த துளசி மாடத்தில்
இருள் சூழ்கிறது
எரியவில்லை
ஒரு தீபமும்

குடிசை முற்றங்களில் களை மண்டிக்கிடக்கும்.
மேற்குவானத்துக்கு அப்பால் சூரியன்...

மாட்டு மந்தையின் சுவடு ஒன்றுமில்லை
புழுதி மண்டலத்தின் தடங்களும் தொடரவில்லை.

எந்த ஒரு பெண்ணும்
குடங்களுடன் நதிக்கரை போகாததால்
மிதிவண்டியின் கட்டைகள்
தூசு படிந்து கிடக்கும்.
காட்டுப் புற்கள் மூடிக் கிடக்கும்
கிராமச் சாலைகளை.

மாலையை வரவேற்று
ஒரு சங்கும் ஊதப்படவில்லை.

மேற்கு வானத்துக்கு அடியில் சூரியன்...
சும்மா கிடக்கிறது நெசவுத் தறி

எண்ணெய்ச் செக்குகளை
ஓட்டுவாரில்லை

மூடிக்கிடக்கிறது குயவர்களின் குடிசை
கதவுகளை இழுத்து மூடிவிட்டுக்
கடைக்காரர் போய்விட்டார்.

கொல்லுப்பட்டறையில் சாம்பல்படிந்த ஊதுலைகள்
சும்மா கிடக்கின்றன
கொல்லர் போன இடம் தெரியவில்லை.

காற்றில் குளிர்கால உணர்வு
சிற்றூர்ப் பொதுமன்றில்
தீ எதுவும் எரியவில்லை.

'ஹுக்கா' சுற்றுக்கு விடப்படவில்லை.
சச்சரவிடும் முதியோர்களும் போய்விட்டார்கள்

நள்ளிரவில் ஊர்க்காவலரின் குரல் கெட்டுக்
குரைக்க ஒரு நாயும் இல்லை
தொடுவானில் நிமிர்ந்து நிற்கும்
நெடுமரங்கள்
தங்கள் கிளைகளை அலைக்கும்.

தங்க நெற்பயிர் தழைத்து வளரும்
கனவுகளால் உசுப்பப்பட்டு
எதிர்பார்ப்புடன் வெளியே நோக்கும்.
நகர்ப்புறங்களுக்குச் செய்தி போகும்
துயர்படிந்த அத்தெருக்களில் நடந்தபடி
உயிர்த்திருப்பதைக் காட்டிலும் / கூடுதலாய்ச்
செத்திருப்பதாய்த் தோன்றும் மக்கள் கூட்டம்
அச்செய்தியைக் கேட்கிறது.

புத்துறுதியுடன் உயிர்த்தவர்களாக
தங்கள் கண்ணீரைத் துடைக்கிறார்கள்
மகிழ்ச்சியான அறுவடைத் திருவிழாவை
நம்பிக்கையுடன் எதிர் நோக்குகிறார்கள்

சிற்றூர்ச் சாலையில் கடைசி மட்டுக்கும்
மீண்டும் கேட்கும்
வேட்கைமிகும் காலடி ஓசை.
வானத்திலிருந்து மீன்கள் வெளிவந்து விட்டன
பறவைகள் பாடுகின்றன
வாழ்த்துகிறது நதி
கர்வமுற்ற உழவர்கள்
முடிவற்று விரியும் நெல்வயல் வெளியை
அரசர்களைப் போல்
ஆர்வத்துடன் பார்வையிடுவார்கள்.

# ஒரு முகத்தைத் தேடுகிறேன்

எஃகுத் தோளுடன் இறுகிய கை ஒன்று
வானோக்கி உயர
வாரப்படாத தலைமுடி எல்லாம்
நெருப்பு நாக்குகள் போல் காற்றில் அலைய
ஊர்வலம்
அதிலே முகமொன்று கண்டேன்

புயல் பொருதலைத்த கடல் அலை உச்சியில்
பாஸ்பரஸ் போல
கூட்டத்தின் நடுவில் அம்முகம் சுடர்ந்தது,
கூட்டம் முடிந்தது
மக்கள் கலைந்தனர்
கைகளைத் தொங்கப் போட்டவாறு
அந்தமுகம்
நகரும் கானகத்தில் மறைந்தது.

காலையிலும் மாலையிலும்
நான்
சுற்றி அலைகிறேன்
நகரும் மக்கள் கூட்டத்தை
நின்று கவனிக்கிறேன்
அந்த முகத்தைத் தேடுகிறேன்.

கூரிய மூக்குள்ள ஒரு பெண்ணை
நான் விரும்பலாம்
இளமான்விழிப் பாவையின் பார்வை
என்னைக் கவரலாம்
ஆனால் வானோக்கி அந்தக் கைகள்
உயர்த்தப்படவில்லை.

புயல்பொருதலைத்த கடல் அலை உச்சியில்
பாஸ்பரஸ் போலச்
சுடரும் அந்த முகத்தை
நான் வீணே தேடினேன்

விலைமிகுந்த அழகுப் பொருட்களால்
தனது
அழகின்மையை மறைக்க முயலும்
செயற்கை முகம் ஒன்றைப் பார்க்கும் பொழுதும்
ஒரு பிண நாற்றத்தை மூடாப்பிட முயலும்
வாசனைத்திரவியம் பூசப்பட்ட உடலைக்
கண்ணுறும் போதும்,

உறைநீத்த ஒளிறுவாள்போல
என்னை உசுப்பிய
அந்த ஒப்பற்ற முகம்
என் முன்
மின்னலிடுகிறது

பகல் கறுக்கும் பொழுது
தடைசெய்யப்பட்ட துண்டறிக்கைகளை
நீளும் கைகளில் திணிக்கிறேன்

நொறுங்கும் கோட்டையைச்
சுக்கு நூறாக்கும்படி
அவர்களிடம் அறைகூவல் விடுகிறேன்

முண்டியடிக்கும் அந்தக்
கூட்டத்தின் நடுவில்
முகம் ஒன்று வடிவம் பெறும்
அனைத்துலகின் தளையற்ற காதல்
இரண்டுள்ளங்களுக்கும்
பாலமிடும்.

# வந்து கொண்டிருக்கிறேன்

மேல் நோக்கிய போது
'நீலவிசும்பிடையே உன் முகம் கண்டேன்'
மூடிய கண்களுக்குள் உன்முகம் கண்டேன்
இடிமுழக்கங்களைச் செவிடாக்கும்
உன் அழைப்பை கேட்டேன்

குழந்தைகளின் அழுகைஒலி
இரவையும் பகலையும்
இருகூறாக்குகிறது
மரணத்திற்குப் பயந்து
நம்பிக்கையற்றவர்களாய்
வாழ்க்கையை அணைத்துக் கொண்டு
ஓலமிடுகிறார்கள்

இடிமுழக்கங்களைச் செவிடாக்கும்படி
உனதுகுரல்
என்னை அழைக்கிறது

ஆம் -
நான் வந்து கொண்டிருக்கிறேன்
முற்றுகையிடும் இருளைப் புறந்தள்ளியபடி
அங்குயார் ஒரு துப்பாக்கிக் கத்தியை உயர்த்துவது?
நான் சொல்கிறேன் - விலகிப்போ !
அங்கு யார் தடையைப் போட்டிருப்பது?
நான் சொல்கிறேன் - அப்புறப்படுத்து
உலகம் முழுக்க நான் அமைதியைக் கொணர்வேன்
துணிவான, தவிர்த்தற்கரும்
அமைதி

# சல்மானின் தாய்

பைத்தியக்கார பாபரலியின்
கண்களைப்போல
வானம் மந்தமாய் இருக்கிறது.

ஐந்து நிலையங்களைக்கடந்து
ஊர்வலம் கல்கத்தாவை நோக்கி முன்னேறுகிறது
முன் வரிசையில்
அவன் மகள் சல்மான்
தன் தாயைத் தேடி நடக்கிறாள்
நகரும் ஊர்வலத்தில் சேர்ந்து நடப்பது
அத்தனை எளிதாய் இல்லை.

கல்கத்தா பெருநகரில் சந்துகள், துணைச் சந்துகளில்
சல்மானின் தாயே
எங்கு ஒளிந்திருக்கிறாய்?
பாபரலியில் கண்களைப் போன்று
பயங்கரமான
இந்த வானத்தின் கீழே
எங்கே உன் புகலிடத்தைக் கண்டுபிடித்தாய்?
ஊர்வல முழக்கத்தில்
உன் மகளும் இணைகிறாள்.

கவனி,
கண்ணீரால் ஈரமான பீளைசாடிய
கண்களுடன்
அவள் உன்னை அழைக்கிறாள்
பஞ்சத்தின் வெறுமையில்
பிறந்தவள் அவள்
இன்னொரு பஞ்சத்தை எதிர்நோக்கி
அவள் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறாள்.

# நீ எப்பொழுது அழகாய்த் தோன்றினாய்?

நீ எப்பொழுது அழகாய்த் தோன்றினாய்?
உன் சேலையின் ஓரம்
குப்பென்று வீசிய காற்றால்
அலைக்கழிக்கப்படும் போதா?
ஒரு போதும் இல்லை.

சாயும் பிற்பகல் வெயிலில்
வியர்வைத் துளிகள்
உன் முகத்தில் முத்துக்கள் போல்
ஒளிவீசும்போதா?
ஒரு போதும் இல்லை.

உன்னிடம் நான் சொன்ன எதற்கோ
மகிழ்ந்த - நீ
வானம் சுடரும்படி ஒரு புன்னகை செய்த போதா?
ஒரு போதும் இல்லை.

சங்கு ஒலித்தபோது
அழுக்குத் துண்டுகளைத் தலையில் சுற்றி,
நெருக்கி நிற்கும் தொழிலாளர் கூட்டம்,
வீங்கும், சுழிக்கும், கடல்போல
உன்னைச் சுற்றிக் கொண்டு...
ஒரு துண்டறிக்கைக்காக அவர்கள்
கைகள் நீண்டபோது
என் பார்வையிலிருந்து நீ காணாமற் போனாயே
அப்பொழுது உண்மையிலேயே
நீ
மிக மிக அழகாகத் தோன்றினாய்

# நாம் கடலை நோக்கிப் போவோம்

குழாயிலிருந்து தண்ணீர் சொட்டுகிறது
மற்றொரு இருண்ட காலைப் பொழுது
புகையின் சவத்துணி உடுத்தி,
பாத்திரத் தண்ணீரில் எதிரொளிக்கும்
தனது முகத்தைப் பார்த்துக் கொள்ளும்

அது வரும் மட்டுக்கும்
ஊடுருவ முடியாத இருளானது
சுவர்களில் தனது
தலையை முட்டிக் கொள்ளட்டும்

பெருங்கண் வானுக்கடியில்
கூழாங்கற்களை உருட்டிச்
சுழித்தோடும் நதியின்
குதலைச் சொற்களைச்
சொட்டும் தண்ணீரில் கேட்கிறோம்

நாள் முழுவதும்
மக்கள் வெள்ளம் தெருக்களில் பெருகிப் பாயட்டும்
இங்குதான்
'வந்தே மாதரத்தை' இசைத்தபடி
மக்கள் தங்கள் உயிரை ஈந்தார்கள்
இங்கு
கைகால்களை இழந்த மக்கள்
கட்டைக் கால்களால் நடந்துவரட்டும்

குழாயிலிருந்து தண்ணீர் சொட்டுகிறது
நாம் சொன்னோம்...
'கடலை நோக்கிப் போவோம்'
நதி சொன்னது
தானும் கடலுடன் இணைந்து கொள்வதாய்
நாம் கடலை நோக்கிப் போவோம்
ஆமாம்...
நாம் போவோம்.

# இன்னொரு குழந்தை

நெடிது வளர்ந்த ஆல முதுமரம் ஒன்று
உயர்ந்த தனது கிளைகளுடன் சாய்ந்து
ஒருபெண்ணை
வியந்தபடி கவனித்துக் கொண்டிருக்கிறது.

வீட்டு வேலைக்காரி அவள்
தனது குழந்தையைக் கையில் சுமந்தபடி
பலவீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்ப்பாள்
இரவு வரும் பொழுது
அதே மரத் தடியில் பாய்விரித்துப்
படுத்துத் தூங்குவாள்
கணவன் அவளைக் கைவிட்டுப் போய்விட்டான்.

என்ன வெட்கக் கேடு?
மீண்டும் ஒரு குழந்தையுடன்
அவள் வயிறு பெருத்தது

குளிக்கும் அம்மா மீது ஏறி
அவள் கிழிந்த சேலை கட்டுவதை மறைத்து
அவளது வெட்கத்தை மூடும்
அவள் அண்மையில்தான் தவழத் தொடங்கி இருக்கிறாள்

இந்த உலகுக்கு இன்னொரு குழந்தை
வெகு விரைவில் வந்து விடும்

இருவிழி விரித்து தலை உயர்த்தித்
தரையின் மீது அது தவழும்

பறவையின் சிறகுகள் போல
ஒரு ஜோடிக்கைகள்
ஊஞ்சலாடும்.

ஒரே இடத்தில் மட்டுமே
வாழ்க்கை முழுக்க
வேர்விடும் அந்த
நெடிதுயர்ந்த ஆலமுதுமரம்
உயர்ந்த தனது கிளைகளுடன் சாய்ந்து
வாழ்க்கையின் புதினமான போக்குகளை எல்லாம்
வியந்தபடி கவனிக்கிறது.

# மலர்கள் மலரலாம் மலராமல் போகலாம்

மலர்கள் மலரலாம்
மலராமல் போகலாம்
இங்கே வசந்தம் வந்திருக்கிறது

கணுக்களும் சொரசொரப்பும் நிறைந்த
நடைபாதை மரம் ஒன்று
கற்களில் வேர்கள் புதைத்து
தனது விலா எலும்பிலிருந்து
வெடிப்புறும் தளிர்களுடன்
புன்னகை பூத்தபடி ....

மலர்கள் மலரலாம்
மலராமல் போகலாம்
இங்கே வசந்தம் வந்திருக்கிறது

தெருவிளக்குகள் கண்ணாடிக் கூண்டுக்குள்
கண்சிமிட்ட
தெருக்களில் சாவு நடைபோடத் துணிந்த
அந்த நாட்களை நினைவு கூர்வோம்

கறுத்த அந்த நாட்கள்
பிரிந்து சென்ற நாட்கள்
மீண்டும் வரவே கூடாது என
நான் விரும்புகிறேன்

தெருச்சுற்றும் ஏழைச்சிறுவன்
மஞ்சள் நிற மாலைகளில்
ஒன்றிரண்டு பைசாக்களுக்காகக்

குயிலைப்போலக் கூவிக் காட்டுவான்
அந்த நாட்களுடன் அவனும் போய்விட்டான்.

சந்தின் கடைசியில்
அழகற்ற பெண் ஒருத்தி,
சிவப்பில் தோயும் வெளுத்த வானத்தின் கீழ்,
ஒரு பலகணியில் சாய்ந்து நிற்கிறாள்.
ஒழிந்துபோன நாட்களை அவளும்
நினைக்கிறாள்.

திடீரென்று
அவளைச் சுற்றிச் சிறகடித்த
வண்ணத்துப் பூச்சி
அவள் உடம்பில் உட்கார்கிறது.

வண்ணத்துப் பூச்சிக்குக்
கிறுக்கா, குருடா
அல்லது வெறும் குறும்பா?

பிறகு
பேரொலியுடன் ஒரு கதவு மூடுகிறது.

கணுக்கள் நிறைந்த நடைபாதைமரம்
வளரும் இருளில்
தன் முகம்புதைத்து
இன்னும் புன்னகை பூக்கிறது.

# பிரிந்து செல்கிறது பிறிதொரு நாள்

சேற்றிலும் சகதியிலும் தள்ளாடி நடந்து
எலும்பு துருத்தும் மூங்கிற் பாலத்தைக் கடந்து
பிறிதொரு நாள் பிரிந்து செல்கிறது.

மெல்லிய முருங்கை மரத்தின் கிளைகளில்
மழையின் பெருந்துளிகள்
ஊஞ்சலாடுகின்றன.

தகரக் கூரைகளின் மீது சொட்டி
ஒலி எழுப்புகின்றன.

''வரும் இலையுதிர் காலத்தில்
வயக்காட்டில் ஏராளமான
நெல்விளையும்'' என்று
இளம் மணப் பெண் கூறுகிறாள்.

குளத்தில் குளித்துக் குடிசைக்குத் திரும்பும் அவள்
குடிசை முற்றத்தில் இருளை
நடனம் ஆட்டுவிக்க
கையில் ஏந்துகிறாள் ஒரு லாந்தர்.

# இப்போதைய சிந்தனை (பிரிவு - 2)

கடந்த காலத்தை என்னால் இப்பொழுதும்
பார்க்க முடிகிறது -
ஒரு சிங்கம் தனது கருத்த பிடரிமயிரைச் சிலிர்ப்பதுபோல
கொந்தளிக்கும் கடல் தன்
அலைகளை உயர்த்துவதை.

சுவர்களில் தோட்டாச் சுவடுகள்
குழந்தைகளின் உடைந்தகரும்பலகைகள்.

குருதிக்கறைகள்,
இப்படி
சிதிலமடைந்து கிடந்தன தெருக்கள்

வண்ணவண்ணமான வேட்கையுடன்
எனது வாழ்க்கை
விடுதலைக்காகத் தனது இளமையைப்
பணயம் வைத்தது.

இனி நெடுந்தொலைவுக்கப்பால்
(எவ்வளவு தொலைவோ!)
இப்பொழுதும் என்னால்
பார்க்க முடிகிறது -
பொன்மயமான உறுதிமொழி கூறும்
ஒளிமயமான நாள்ஒன்று
ஒருபாடலுடன் வருமாறு
என்னைப் பணிப்பதை.
பசுமை கொஞ்சும் நெல்வயலின் நடுவில் நின்று
அதனுடைய பலமான கைகளை
என்னால் பார்க்க முடிகிறது
போரிட்டு வீழ்ந்து படுவதற்குமுன்பு
என் வாழ்வின் ஆழ்ந்தவேட்கைகளை
அதனிடம் தெரிவிக்க விரும்புகிறேன்.

# என் காலடியைத் தொடர்பவன்

பகலும் இரவும்
எப்பொழுதும் அவன்
என் காலடியைத் தொடர்கிறான்.
நான் அவனிடம் கூறினேன்.
மனச்சோர்வே!
உனக்கு ஒதுக்க என்னிடம் நேரமில்லை
இளமையின் தலைவாசலில் நிகழ்ந்த
அப்பட்டமான சாவு ஒன்று
மரத்தடியில் சுருண்டு கிடந்ததை
இப்பொழுது தான் நான் பார்த்தேன்.

பூவுலகில் நடைபயிலும் பயங்கரம்
தனது பற்கள் தெரிய முழங்குகிறது.
நான் அதன் தோலுரிக்க விரும்புகிறேன்
என் மனச்சோர்வே ! முன்னோக்கிப்பார்.
வயதான தலைநரைத்த அகமதுவின் தாய்
நம்மிடம் சில உதவிகளை எதிர்பார்க்கிறாள்.

மனச்சோர்வே !
அருள்கூர்ந்து என்னைவிட்டுப் போ.
எனக்குக் கைநிறைய வேலை...
வயலில் நெல்விதைக்க வேண்டும்
களையெடுக்க வேண்டும்,
இன்னும் என் காலடியில் அவன்
என்னைத் தனியே விடாமல்...

குருட்டுத்தனமான கோபத்துடன்
என் துன்பங்களை எல்லாம்

அவனிடம் சொல்லித் தொலைக்கிறேன்

அவனைச் சபித்தபடி,
''ஏய் பிசாசே!
என்னைவிட்டு நீ ஏன் நரகத்துக்குப் போகக்கூடாது?''
என்கிறேன்.

என்னுடைய வேலையில் புதைந்ததை
எப்பொழுது கண்டறிந்தேன் என்பது
எனக்குத் தெரியாது.
சுற்றி நோக்கிய பொழுது,
அவன்
என்னை நினையாது,
என் நிறைவேறாத ஆசைகளுடன் விளையாடுவதை
நான் கண்டேன்.
புன்னகைத்து ஒரு குறும்புக்காரக்
குழந்தையைத் தூக்குவதுபோல
என் மனச்சோர்வை என்கையில் எடுத்தேன்.

# படிஞாயிறு

மேற்கு வானைக் குருதிப் புனலின்
வெள்ளக் காடாக்கி,
ஒரு பயங்கரக் கொள்ளைக் காரனின்
இரத்தச் சிவப்பான கண்களுடன்
சூரியன்
வருவோர் போவோரை
வெறித்து நோக்குகிறான்
இறுதியாக இல்லம் சேர்கிறான்.

ஒரு காவல்காரன்
தனது *கறுத்த மரியாவில் வருவதுபோல,
மாலை, வெகுநேரம் கழித்தே வருகிறது.

விளக்கு சுவிட்சைப் போடும்போதே
என்னுடைய ஜன்னலின் வழியே
இருள் குதித்தோடுகிறது.

திரைகளை நீக்கியவுடன்
குப்பென்று காற்று
பயந்தோடி வருகிற மானைப்போல் நுழைகிறது
இறுகத் தழுவுகிறது என்னை.

---

* அக்காலத்தில் வங்காளத்தில் கைதிகளை
ஏற்றிச் செல்லும் வாகனம் (Black Maria)
பிளாக் மரியா என்றழைக்கப்பட்டது.

# நான் போகுமிடமெல்லாம்

அலைகள் மலர்வளையம் சூட்டும்
ஒருநதியின் பெயர்,
நான் போகுமிடமெல்லாம்
என் கூட வருகிறது.

லக்ஷ்மியின் கால் சுவடுகளுடன்
கச்சிதமாய்ச் சாணம் மெழுகப்பட்ட
குடிசை முற்றம் ஒன்று
நான் போகுமிடமெல்லாம்
என் கண்களில் பூசியபடி!

# ஏன் இன்னும் அவர் வீடு திரும்பவில்லை

அந்த நாள் முழுக்க அவள்
சுற்றிச் சுற்றி வந்தாள்.
தெருவிளக்குகளை ஏற்றிவைத்து
வெகுநேரம் ஆயிற்று.
அம்மா,
அப்பா ஏன் வீடுவரவில்லை?

தனது சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு.
வெகுவிரைவாய் வீடுவந்து
பூஜைக்குச் சாமான் வாங்கப் போகலாம் எனச்
சொல்லி இருந்தார்.

அம்மா கவலைப்படுகிறார்
ஏன் அவர்வரக்காணோம்.
சமையலறையில்,
பானைகள் இன்னும் கொஞ்சம் கூடுதலாகவே
சத்தம் போடுகின்றன.
கொதிக்கும் நீர் சோற்றுப் பானையின் மீது சிந்தி
அவளது கால்களைச் சுடுகிறது.

பையன் பாயில் உட்கார்ந்து
வரலாற்றுப் புத்தகத்தைப் புரட்டுகிறான்
அவனது முகம் சன்னலை நோக்கியபடி.

கடிகாரம் டிக்டிக் ஒலிக்கிறது
உடைந்த குழாயிலிருந்து
தண்ணீர் ஒழுகுகிறது
மீசை முளைத்த ஆண் பூனை ஒன்று
அடுத்த வீட்டுச் சுவரின் குறுக்கே பாய்கிறது.

வரலாற்றுப் புத்தகப் பக்கங்களில்
எழுத்துக்கள்,
பொருளற்ற கிறுக்கல்களாக
அசைவற்று நிற்கின்றன -
அப்பாவினால் செல்லம் கொடுக்கப்பட்ட
மகனைப் போல.
பூஜைக்குள்ள சாமான்கள் வாங்கி முடியும்வரை
அந்த எழுத்துகளும் அசையமாட்டாது.
அம்மா,
அப்பா திரும்பும் நேரம் இதுவல்லவா?

சமையலை முடித்துக் கொண்டு
அம்மா அவசரம் அவசரமாய்க் குளிக்கிறாள்.
பின்னல் வேலையைத் தொடங்குகிறாள்.
ஊசி தாறுமாறாகச் செல்கிறது.
மெதுவான ஓசை ஒன்று,
கதவின் தாழ் திறக்கப்படுகிறது.
அங்கேயார்.
''நான் தான்'' பையன் சொல்கிறான்.

சந்தருகே காத்திருக்கும்
பையனைக் கவனிக்கிறாள்
மாலைச் செய்திகளை வானொலி ஒலிபரப்புகிறது.
இப்பொழுது அவர் திரும்பி இருக்க வேண்டும்.

சந்தின் கோடிக்குப் பையன் நடக்கிறான்
தெருச் சந்திப்பில் பெருங்கூட்டம்
அவன் ''கறுத்த மரியாவை''ப் பார்க்கிறான்.

அந்த இடத்தைச் சுற்றிப்
பட்டாசு வெடிக்கும் ஓசை
இது பூஜை நாள் இல்லை
வியந்த பையன் முன்னோக்கிச் செல்கிறான்.

வெடிமருந்துப் புகையும் மரணமும் நிறைந்த
பல சந்துகளைத் தவிர்த்தும் கடந்தும்,
நள்ளிரவில் தந்தை வீடுதிரும்புகிறார்.

ஆனால் பையன்
திரும்பவில்லை.

# தாய்-தாய்நாடு

என் அம்மாவை மிக அதிகமாய் நேசித்தேன்,
அதைச் சொற்களால் வடிக்க இயலாது;
எனது சொற்பக் கைக்காசைக் கொண்டு
அடிக்கடி அவளுக்கு ஆரஞ்சுப்பழங்கள் வாங்குவேன்.
கண்கள் எல்லாம் நீர்தளும்ப
நோய்ப்படுக்கையில் அவள் கிடந்தாள்
எப்படி அவளை நேசித்தேன் என்பதை
ஒரு போதும் அவளிடம் சொல்ல முடிந்ததில்லை.

என் நாடே! என் தாயே!
எனது எண்ணங்களை நான்
எவ்வாறு புலப்படுத்துவேன்
நான் எழுந்து நிற்கவும் நடக்கவும் உதவியதரை
நிலையான சுவடுகளை
விட்டுச் சென்றுள்ளது -
எனது எல்லா விரல்களிலும்;
நான் தொடும் எதனிலும்
நீ இருப்பதை உணர்கிறேன்.
என் இதயத்தில் நீ வீணைமீட்டுகிறாய்.

அம்மா, நாங்கள் அஞ்சவில்லை
நமது மண்ணைச் சூறையாடுவதற்காக
கொடிய நகங்களை நீட்டிக் கொண்டு
நமது எதிரிகள் வெளியில் வந்துவிட்டார்கள்.
அவர்களுடைய பிடரியைப் பிடித்து
எல்லைகளுக்கு அப்பால்
வீசி எறிவோம்.

நமது வாழ்வைச் சீர்படுத்த முயன்றோம்.
பிறர் என்ன சொன்னாலும் பேதலிக்காமல்
அந்தப் பணியைச் செய்வோம்.
அம்மா நாங்கள் அஞ்சவில்லை
நமது புனிதப் பணிக்கான பாதையில் குறுக்கிட்டனர்.
இதுவே நமக்குச் சினமூட்டியது.
நமது வாய்களைமூடி,
நமது அன்பைப் பேசுவோம்
ஓய்வறியாத நம் கைகளைக் கொண்டு.

# என்னைக் கவிஞன் என்றழைக்காதே

நான் விரும்புகிறேன் -
தனது சொந்தக் கால்களில்
நிமிர்ந்து நிற்கவேண்டும்
என் சொற்கள்.

நான் விரும்புகிறேன்
நிழல் ஒவ்வொன்றும்
திறந்த கண்ணுடையதாய் இருக்க -
நான் விரும்புகிறேன்
அசைவிலாப் படங்கள் நடக்க

கவிஞன் என்றழைக்கப்படுவதை
நான் விரும்பவில்லை
என் வாழ்வின் கடைசிநாள்வரை
என் தோழர்களோடு
தோளோடு தோள்சேர்ந்து
நடக்கவே விரும்புகிறேன்.

ஒரு ட்ராக்டருக்குப் பக்கத்தில்
என் பேனாவை வைத்துவிட்டுச்
சொல்லவிரும்புகிறேன்
சகோதரா!
இதைஒரு நாளென்று அழைக்க விரும்புகிறேன்.
நெருப்பின் சிறுபொறி ஒன்றை
எனக்கு வழங்கு.

# சும்மா மூக்கை நுழைப்பவர்கள்

இது நிச்சயம்
சதுரங்கம் விளையாட உட்காரும்போது
பிறத்தியார் அலுவல்களில் தலையிடுபவர்கள்,
தங்கள் பணிகளை விடுத்துச்
சூழ்ந்து கொள்வார்கள் என்னை...
ஒவ்வொரு நகர்வுக்கும்
ஆணை வழங்குவார்கள்.

நான் என்ன செய்ய வேண்டும்
எனக்குத் துடிக்கிறது
கைகளை மடக்கியபடி
அவர்களிடம் சொல்ல வேண்டுமோ?

''பெரிய மனிதர்களே!
இதை அமைதியாய்ப் பாருங்கள்
இல்லையேல்
உங்கள் சொந்த இடங்களுக்குத்
திரும்பப் போங்கள்

அடப்பாவிகளே!
என் விளையாட்டை
என்னை ஆடவிடுங்கள்''

# பழைய தலைமுறை

அந்தப் போக்கிரிப் பசங்களின்
கூச்சலை நிறுத்துங்கள்
இந்த நாள் முழுவதும் ரொம்பக் களைப்பாய் உள்ளது
கொஞ்ச நேரம் ஓய்வு கொள்கிறேன்.
அந்தப் பழைய கற்சிலை உடைக்கப்பட்டுவிட்டதா?
அந்தப் பசங்கள் தூளி படுத்துவதில்
ஒன்றையும் விட்டு வைக்க மாட்டார்கள்
ஹூம்... காலம் மாறிவிட்டது
இந்த நாள் முழுவதும் ரொம்பக் களைப்பாய் உள்ளது
கொஞ்ச நேரம் ஓய்வு வெடுக்க விடுங்கள்.

என் வயலில் நெல் விதைத்திருக்கிறேன்.
என் குட்டையில் மீன் முட்டைகளைப் போட்டிருக்கிறேன்
வெயிலாலும் மழையாலும் ஊட்டம் பெற்று
நெல்லும் மீனும் விரைவாய் வளரும்.
பிறகு பாட்டுக்கச்சேரிக்காரர்களைக்
கூலிக்கு அழைக்க வேண்டும்

இந்த நாள் முழுவதும் ரொம்பக் களைப்பாய் உள்ளது.

அந்தப் போக்கிரிப் பசங்களிடம்
கொஞ்சம் பொம்மைகளைக் கொடு
அவர்களுடைய கூச்சல்
என் காதுகளைச் செவிடாக்குகிறது
அன்புக் குழந்தைகளே,
அமைதியாய் இருக்க முடியாதா?
சுற்றிலும் பாம்புகளும் பெண் பிசாசுகளும்...
இருட்டில் வெளியே போகாதீர்கள்.

என் கண்களை மூடி,
இந்தச் சோம்பேறிப்பசங்களுக்காக
என்ன செய்ய முடியும் என்று
பார்க்க வேண்டும்
இந்த நாள் முழுவதும் ரொம்பக் களைப்பாய் உள்ளது
கொஞ்ச நேரம் ஓய்வு வெடுக்க விடுங்கள்.

# புதிய தலைமுறை
## (பிரிவு - 1)

அப்பா சொல்கிறார்;
நடப்பது எல்லாம் விதிப்படியே நடக்கும்
காலம் மட்டுமே முக்கியமானது

அப்பா சொல்கிறார்;
அலைகளின் ஏற்ற இறக்கத்தை
முன்கூட்டியே நாம் தெரிந்து கொள்ள வேண்டும்

அப்பா சொல்கிறார்;
தெருவில் சிதறிக் கிடக்கும்
பிணங்களைத் தாண்டி
மெதுவாகநட

அப்பா சொல்வதெல்லாம் சரியா என்று
நான் யோசிக்கிறேன்.
பொறுத்துக் கொள் என்பதற்கு
உன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் கலை என்பது
அவர் கண்ட பொருள்

நான் சொல்கிறேன்...
தந்தைமார்களே !
இது வெட்கக்கேடு.

# என்னைத் தனியே விடு

எனது வலது காது கிட்டத்தட்டச் செவிடாகிவிட்டது.
இடது காது பரவாயில்லை
ஆக எனது அக்கம்பக்கத்தார் பேசுவதை
என்னால் கேட்க முடியும்

''நீ மாறிவிட்ட மனிதன்
என்ன வெட்கக்கேடு
கடந்த காலத்தில் உனது குரல்
இடியாக முழங்கியது
இப்பொழுது கீச்சிடுகிறது.
விருதுகள் உன்னைத் தலைகனக்கச் செய்து விட்டன.
நீ ஒரு கட்சிமாறி
ஒரு காலத்தில் முற்போக்காளன்
இப்போது பிற்போக்குவாதி.

''உனது நெருப்பின் பொறிகள் எங்கே?
நீ மலர்களைக் கொஞ்ச ஆரம்பித்துவிட்டாய்
ஊர்வலங்களைத் தவிர்த்து
விழாக்களில் களிக்கிறாய்
நடப்பது நல்லதாக இருந்தாலும்
நீ அப்பால் செல்...

தயவுசெய்து
என்னைத் தனியே விடு;
செல்.
அப்பால் செல்
ஆமாம்.

# வெட்கம் வெட்கம்

1. இரவும் பகலும் இளித்தபடியே இருக்க
நான் என்ன
சட்டமிட்ட ஒளிப்படமா?
இரவும் பகலும் அலறியபடி இருக்க
என் வாயில் என்ன
ஒலி பெருக்கியா வைத்திருக்கிறேன்?
இரவும் பகலும் என்கைகளை
மூடியபடி வைத்திருக்க
என் விரல்களுக்கு என்ன தொழுநோயா?

2. சட்டை, புனிதமான பூணூலை மறைத்துக் கொண்டிருக்க
சட்டையின் கைப்புறத்துள் தாயத்து
ஒன்றை ஒளித்துக் கொண்டு,
தூய பிராமண வழிப்பையன் ஒருவன்
இவ்வுலகத்தை மாற்றி அமைப்பதென
நிரம்பத் தெளிவுடன் விளக்கிக் கொண்டிருக்கிறான்.

# மழை வரட்டும்
## (பிரிவு - 1)

நாள்முழுக்க வானம் விடியாமூஞ்சியாய் இருந்தது
இப்பொழுது ஒரு மாறுபட்ட
தோற்றத்தைக் கொண்டிருக்கிறது
ஒரு புது உறுதி அதனுடைய
நெஞ்சை நிறைத்தது போலத் தோன்றுகிறது.
தடைசெய்யப்பட்ட ஒரு கட்சியின்
பொறிபறக்கும் அறிக்கைகள்
பெருங்கூட்டத்தில் சுழித்து
வீசப்படுவது போல,
வானம் தூறிக் கொண்டிருக்கிறது.

என் சன்னலை ஒட்டி
மெதுவான முணு முணுப்புகளைக் கேட்கிறேன்
குளிர்ந்தகாற்றின் திடீர்ச் சல சலப்பு...
என் சன்னல் திரை அமைதியின்றிப் படபடக்கிறது -
ஏதோ நடக்கும் என்ற எதிர்பார்ப்பில்.

# தயவுசெய்து வழிவிடுங்கள்

மூச்சு முட்டுவது போல உணர்கிறேன்
தயவுசெய்து கொஞ்சம் வழிவிடுங்கள்
என்னை வெளியே போக விடுங்கள்

எங்கே நான் போகவேண்டும்
ஒவ்வொரு காடும் எரிகிறது
மூச்சுவிடப்புதிய காற்றில்லை

இரவும் பகலுமாய்
தனது குத்துவாளை வீசியபடி
பயங்கரமான கொலைக்களம் ஒன்று
தலைக்கு மேலாகச் சுழித்துக் கொண்டிருக்கிறது

இங்கே
ஒரு கல் சுவரில் மோதி
நம்முதுகுகளைச் சிராய்த்துக் கொண்டிருக்கிறோம்
வெறிபிடித்தவர்களாகக்
கூர்மையான நகங்களால்
சொந்த மனிதர்களின் தசையைப் பிய்த்தெறிகிறோம்
பகலும் இரவும்
இரவும் பகலும்.

# சிறை வாழ்க்கை நினைவுகள்

மரங்கள், பறவைகள், வயல்கள், நதிக்கரைகள்,
இயற்கையின் வேறுபட்ட காட்சிகளைப் பார்த்துவிட்டுத்
திரும்பி நடந்து கொண்டிருந்தேன்.

''தோழரே! தோழரே!''
திடீரென்று யாரோ என்னைச் சத்தம் போட்டுக்
கூப்பிடுவதாய்த் தோன்றுகிறது
நான் திரும்பினேன்.
தெரிந்த முகம் அது
குழிவிழுந்து முடிசிலும்பி நிற்கும் கன்னங்கள்
தொங்கிய முகம்
அவர் குட்டை வேட்டியையும்
காக்கி அரைச் சட்டையையும்
உடுத்தி இருந்தார்
நெருங்கி வரவர
அந்த முகத்தை நான் நினைவு கூர்ந்தேன்
பல ஆண்டுகளுக்கு முன்பு
நாங்கள் இருவரும்
சிறையில் ஒன்றாய் இருந்தோம்.
ஆனால் அவர்பெயரை என்னால்
நினைவு படுத்த முடியவில்லை.

அந்தோ
என் நினைவின் ஆல்பத்தில்
பெயர்கள் மங்கிவிட்டன
ஒரு தேனீர்க் கடையில் பெஞ்சில் உட்கார்ந்து
சூடான தேனீரைக் குடித்துக் கொண்டிருந்தோம்
பழைய சிறைவாழ்க்கையைப் பற்றி
மகிழ்ச்சியாய்ப் பேசிக் கொண்டிருந்தோம்

'பற்களை இறுகக் கடித்துக் கொண்டு
சாப்பிட மறுத்து
எப்படி நாங்கள் உண்ணா நோன்பிருந்தோம்

நாங்கள் தடுக்கப்பட்ட மாடிப்படியை நினைத்துப் பார்த்தோம்
கண்ணீர்ப்புகையைத் தணிப்பதற்காக
வராந்தாவில் தண்ணீர் ஊற்றி வெள்ளக் காடாக்கியதை,
இரவு முழுவதும் குண்டுமாரி பொழிந்ததை...

இருந்தும் அந்நாட்களில்
நாங்கள் மகிழ்ந்திருந்தோம்.
எங்கள் கண்களில் கண்ணீர் மின்னியது
பழகிய பழைய முகங்களை நினைத்துக் கொண்டோம் -
பிரபாத், முகுல், சுமதா மற்றும் அனைவரையும்.
இன்றைய வாழ்க்கைக்கு மீண்டும் திரும்பினோம்
நம் பழைய நண்பர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்
அவர்களின் இருப்பிடங்கள் நமக்குத் தெரியுமா?
அச்சவுணர்வு ஒன்று எங்கள்மேல் படர்ந்தது
அது தொற்றிக் கொள்வதாய் இருந்தது
நாங்கள் இருவரும் அமைதியாய் இருந்தோம்

எங்களது இப்போதையச் சார்புகள் பற்றி
சில செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தபோது
ஒரு பெரிய பேரலை
எங்களை அடித்து வீழ்த்தியது.

எங்களுடன் மோதுவது ஒரு சுவர்,
இரும்புக் கம்பிகளுக்கு நடுவில் இருள்.
மீண்டும் எங்கள் பழஞ்சிறை அறைகளில் நாங்கள்,
நாங்கள் வலையில் அகப்பட்டுக் கொண்டோம்
நாங்களே உருவாக்கிய சொந்தச் சிறைகளில்
மாட்டிக் கொண்டோம்

# என்மகன் என்னை விட்டுப் போய்விட்டான்

(பகுதி - 2)

என் நெற்றியில் வேர்வைத் துளிகள்
காலம் நிலைகுத்தி நிற்கிறது
துண்டிக்கப்பட்ட வயரின் கீழே
நின்றுவிட்ட மின்வண்டிபோல.

விடுதலைக்குப் போராடுவதற்காக
என் மகன் காடு நோக்கிப் போய்விட்டான்
அன்பின் கைதியாக
இங்கே நான்
அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

ஒரு மதுக்கடையில் மேசைமுன் இருக்கிறேன்
பக்கத்து மேசையில்
போதையில் முங்கியபடி ஒருவன்

கொஞ்சமாகக் குடிக்க வேண்டும் என்ற உறுதியுடன்
சோடா பாட்டிலைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன்.
இப்போதையக் கவலைகளை உதறி எறிய வேண்டும்
பழைய நினைவுகளை நோக்கித் திரும்புகிறேன்.

படகு கிடைக்காவிட்டால்
ஒரு காகிதப் படகைத் தள்ளிக் கொண்டு
என் நனைந்து போன சப்பாத்துகளைக் கையில் ஏந்தியபடி
ஆழமற்ற நீரோடைகளைக் கடந்து செல்வேன்.

நனைந்த வயல்களின் ஊடே
என்னிலிருந்து பனித்துளிகள் சிந்த,
இது ஒரு நீண்ட கனவு நடை

தனது கரைகளைச் சிதைக்கும்
பொங்கும் நதிகள் குறித்து
எனக்குப் பயமில்லை.

இருளில்
கையில் லாந்தரை ஏந்தியபடி
ஒரு புதுவிதமான திகில் உணர்வுடன்,
நடந்த
என் இளமைக்காலத்து வியப்புணர்வை
நான் திரும்பப் பெறவிழைகிறேன்.

என் மகன் காடுநோக்கிப் போய்விட்டான்
அன்பின் கைதியாக
இங்கே நான்
அகப்பட்டுக் கொண்டேன்

நேற்றிரவு இரண்டு வேன்களில் வந்த காவல்துறையினர்,
என் வீட்டை முற்றுகையிட்டனர்
துப்பாக்கிகளை ஏந்தியபடி
ஒவ்வொரு மூலை முடுக்கையும் சோதனை இட்டார்கள் -
அவனைக் கண்டுபிடிக்க முடியாது என்பதை
நன்றாகத் தெரிந்திருந்தும்.

நாற்பதாண்டுகளுக்குப் பிறகு
நெருப்பில் தணிந்த கனல்கள்
புதிதாய் என்னுள் தூண்டிவிடப்பட்டுள்ளன.

நகர்ந்து செல்லும் ஊர்வலம் ஒன்றை
அமைதியாகக் கவனிப்பதற்காக
நான் சிறிது நேரம் நிற்கிறேன்
கூட்டங்களுக்குச் செல்கிறேன்
அவர்கள் பேசுவதைக் கவனிக்கிறேன்
யாராவது சிறப்பாகப் பேசும்போது
ஒப்புதலில் என்தலை அசைக்கிறேன்
இந்த வாழ்க்கையில் நான் மூழ்கிப் போய்விட்டேன்
என்னால் இதைத்துறந்துவிடுவது எளிதன்று.

என் மகன் காடுநோக்கிப் போய் விட்டான்
அன்பின் கைதியாக
இங்கே நான்
அகப்பட்டுக் கொண்டேன்
என்பட்டத்து இளவரசன்
விடுதலையின் கொடி ஏந்தியபடி செல்வதை -
எனது இளமையில் நான் ஏந்திய கொடி அது.
என்னால் பார்க்க முடிகிறது.

# ஊமைக்குயில்

சொற்களின்மேல் சொற்களை அடுக்கி
எனது நாட்கள் ஒருவகையாகக்
கழிந்து போய்விட்டன
இப்பொழுது நான் வருந்துகிறேன்

ஐம்பது வயதைக் கடந்துவிட்டேன்.
விளையாட்டாக
எனது கூண்டில்
ஒரு குயிலை அடைத்தது யார் என
வியந்து கொண்டிருக்கிறேன்

என் மறதியில் நான் மகிழ்ச்சியாய் இருந்தேன்
குன்றுகளின் நதிகளின் பெயர்கள்,
என் நினைவில் புதைந்து கிடக்கின்றன.

கூண்டில் அடைபட்ட ஊமைக்குயில்
என் இதயத்தைத் திறந்து
ஒரு பாடலுடன் வீழுமேயானால்
என்ன நிகழும்...
நான் வியப்படைகின்றேன்.

# இப்படித்தான் இருக்க வேண்டும்

சாலைகளைத் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்
சாலைகளோ நமது கால்களை உடைக்கின்றன
இது இப்படித்தான் இருக்க வேண்டும்,
சாலைகள் அகலமாக வளரும்,
இவை எவ்வளவு காலம் இளமையோடிருக்க முடியும்?
நமது எலும்புகளை முறித்தபடி
கார்கள் விரையும்
இது இப்படித்தான் இருக்க வேண்டும்
என் அன்பே
பெரிதாகக் கைதட்டிப் பாராட்டு.

நெடியவான் மாடங்கள்
தங்கள் தலைகளை நிமிர்த்துகின்றன
இது இப்படித்தான் இருக்க வேண்டும்
நாம் வெளியேறும் காலம் வந்துவிட்டது.
விரைக... சுணங்காதே..'

வீடற்ற ஏழைகள் இதை
ஒரு பொறாமை உணர்வோடு பார்ப்பார்கள்
படைப்பாற்றல் மிக்க மேதைமையை
இந்தக் காலம், கோருகிறது.
இது நெஞ்சறிந்த உண்மை
ஏழைகளை விட்டுத் தள்ளிவாழும் செல்வர்களுக்கு
மேலும் சேர்க்க உரிமையுண்டு.
இது இப்படித்தான் இருக்க வேண்டும்
புதிய வசதிகளோடு
வீட்டு வாடகைகள் வானுயரும்
புதுவரிச்சுமைகள்

உனது நாடித்துடிப்பை அச்சுறுத்தும்

நான் சொல்கிறேன்
என்யோசனையை ஏற்றுக் கொள்
(நீ நலமுற வாழ்த்துகிறேன்)
நல்லது நடக்கும்போதே நீ வெளியே போ
தாப்பாவில் உள்ள
குப்பை கொட்டுமிடத்துக்குப் போ.

மிடுக்கும் மேட்டிமையும் கொண்ட
புதுப்பணக்காரர்கள்
மிகும் பணத்திறனால்
மலர்விட்டு மலர்தாவுவார்கள்
இந்த இடத்தை மொய்த்துக் கொள்வதற்கு
அவர்களுக்கு உரிமையுண்டு.
அடித்தட்டினரும் புறக்கணிக்கப்பட்டோரும்
நரகத்திற்குத்தான் போக வேண்டும்
இது இப்படித்தான் இருக்வேண்டும்.

பூங்காக்களிலும் நதிக்கரைகளிலும்
உல்லாச ஊற்றுகள் பொங்குகின்றன
வங்காளத்தின் கேவலப்பட்ட மக்களே
வாயைமூடுங்கள்
இங்கே அந்நியர்கள்
நீங்கள்

# கயிறிழுப்புப் போட்டி

ஒருகால் வெளியே நீண்டுள்ளது
மற்றொன்றோ மனத்திற்குள்ளேயே
கிளைகளில் பகற்கனவுகள்
ஊஞ்சலாடுகின்றன
தளைக்கப்பட்ட நினைவுகள்
வேர்களின் அடி ஆழத்தில்
துயில்கின்றன.

நான் ஒரு காலை உயர்த்தும் பொழுது
மறுகால் பின்னிழுக்கிறது
இப்படித்தான் ஒரு கயிறிழுப்புப்போட்டி நடக்கிறது
ஒருவன்மேலே போகிறான்
மற்றொருவன் கீழேவருகிறான்
ஊசலாட்ட விளையாட்டு.

ஒரு கால் வெளியே நீண்டுள்ளது
மற்றொன்றோ மனத்திற்குள்ளேயே
ஒருகால் முன்னோக்கிச் செல்லும்
மற்றொரு கால் மூலையில் ஒளியும்
பயத்தால் தாக்குண்டவன் ஒருவன்
மயிர் சிலிர்த்துக் கோபத்தால் கொந்தளிப்பவன் மற்றொருவன்
ஒரு கால் வெளியே நீண்டுள்ளது
மற்றொன்றோ மனத்திற்குள்ளேயே

# ஒரு கிழவி

ஒரு கிழவி நகர்ப்புறச் சுவரில்
வரட்டி தட்டுவார்
இப்பொழுதோ பெரியவீட்டு இளைஞர்கள்
சுவர்களைக் கைப்பற்றி விட்டார்கள்
கட்சி முழக்கத்தாலும்
வண்ணச் சித்திரங்களாலும் நிறைக்கிறார்கள்
கிழவிக்கு இந்தப் புதியவர்களையும் தெரியாது
கட்சிகளையும் தெரியாது
எதிர்க்கட்சிக்காரர்கள், தங்கள்
கட்சிப்பறைகளை முழக்கியபடி
அதே சுவரைச்
சுவரொட்டிகளால் பங்கிட்டுக் கொள்வார்கள் -

ஒருவன் சொல்கிறான்.
''பட்டினி கிடக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும்
பால்வார்ப்போம்
கொஞ்சம் தட்டிக் கொக்கிகளை மேலே ஏற்ற
அருள் கூர்ந்து உதவிடுங்கள்.''

மற்றொருவன் சொல்வான்
''வறுமையை வெளியேற்ற
வைத்திருக்கிறோம்
ஒரு புத்தி சாலித்தனமான திட்டம்
அமைதியாக இருந்து கவனியுங்கள்''

சொற்களால் சோர்வுற்ற அந்தக் கிழவியோ,
நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள்
இப்பொழுது கூன்விழுந்த அக்கிழவி
காத்திருக்கிறாள்

வாக்களிக்கப்பட்ட வருங்காலத்திற்காக.
விடுதலைவந்து எத்தனை ஆண்டுகள்
போயின என்று வியப்புறுகிறாள்.

'நாற்பதாண்டா?'
கிழவியை அப்புறப்படுத்திவிட்டு
எதிர்கட்சியினர்
சுவர்களைப் பங்கு போடுகிறார்கள்
எதுவும் நடக்கவில்லை
விளையாட்டுக்கு யாரும்
தயாராகவும் இல்லை.

# முழங்கால் அளவுத் தண்ணீரில்

முழங்கால் அளவுத் தண்ணீரில்
நீரை விலக்கியபடி சென்ற அவன்
இந்தக் பள்ள நீரைப்பற்றி
முன் கூட்டியே தெரிந்திருக்கவில்லை

இந்தப் பள்ள நீருக்குச் சில இயல்புகள் உண்டு என்று
அவனுக்குத் தோன்றவில்லை
திடீரென்று
பார்வைக்குத் தெரியாத ஒரு குழி
அவனது
முழங்காலையும் மாயையும் பெயர்த்தது
வழியிலேயே உட்கார்ந்துவிட்டான்
முழங்காலளவுத் தண்ணீர்
கழுத்துக்கு வந்து விட்டது.

# சிரிக்கும் கழுதைப்புலி

எனக்குப் பின்னால் வந்த காலடி ஒலிகேட்டு
கடுமையாகச் சொன்னேன்.

''போ... என்னைத் தொல்லை செய்யாதே.''
பின்னங்கால் துள்ள அவள் போய்விட்டாள்

மற்றொருநாள் அவள் வந்தாள்.
எனக்குப் பின்னிருந்து திடீரென
அவள் விரல்களால் என் கண்களை மூடினாள்
என் கண்களை விடுவித்துக் கொண்டேன்
என் கண்கள் பேனாவில் நிலைத்திருந்தன.
கடுமையாகச் சொன்னேன்
''வீண் பொழுது போக்க எனக்கு நேரமில்லை
போய்விடு''
அவள் ஓடி விட்டாள்
இப்பொழுது என் வேலையை எல்லாம் முடித்துவிட்டேன்
இவ்வுலகில் எல்லா நேரமும்
சோம்பி இருக்கிறேன்.

கால்களை வெளியே நீட்டி
அதே பெயரை மீண்டும் மீண்டும்
உச்சாடனம் செய்து கொண்டு
என் ஜெபமாலையை எண்ணிக் கொண்டிருக்கிறேன்
என் மனம் திரும்பிப் பார்க்கிறது.

எனக்கு முன்னால் ஒருமரம்,
இலைகளில் இருந்து நீர் சொட்டுகிறது
சுவர்க்கடிகாரம் 'டிக்' ஒலிக்கிறது.
வியர்வையால் என் நெற்றி நனைந்திருக்கிறது.

நான் திரும்பிப் பார்ப்பேனேயானால்,
வயிறு முட்டத்தின்று
வாயை நக்கிக் கொண்டு
துண்டுத்தாள் போன்ற
வெள்ளெலும்பைப் பற்றி நிற்கும்
சிரிக்கும் கழுதைப் புலி ஒன்றைப்
பார்த்திருப்பேன்.

# காத்திருந்து

உடை உடுத்திக் கொண்டு
தயாராகி,
வெகுநேரம் காத்திருக்கிறேன்
என்ன சித்திரவதை.
என்னை அழைத்துச் செல்ல
யாரும் வரவில்லை.

நான் செய்ய வேண்டிய
வேலை எதுவும் மிச்சமில்லை
என் மேசையைத் துப்புரவு செய்துள்ளேன்,
கடிகார முட்கள் நினைவுபடுத்தியபடி உள்ளன
என்னை அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை.

சன்னல் வழியே மறையும் சூரியனின்
தங்க ரேகைகள் வழிகின்றன.
'ஆஷ்ட்ரேயில்' பீடித்துண்டுகள்...
கடைசி இழுப்பில் புகை
அறையை நிறைக்கிறது.

என் தோளில் மாட்டியபையை
எடுப்பதும் வைப்பதுமாய்,
சப்பாத்தின் நூல்களைக்
கட்டுவதும் அவிழ்ப்பதுமாய்
இருக்கிறேன்.

நான் உடையணிந்தது வீணாயிற்று
என்னை அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை
திடீரென்று சத்தம் கேட்டுக்
காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறேன்
ஓ... அது ஒன்றுமில்லை

கதவு ஊமையாகிவிட்டது
ஈ ஒன்று உடம்பைச் சுற்றுகிறது.
நான் வெகுநேரம் காத்திருக்கிறேன்
காலம் நிலைகுத்தி நிற்கிறது.

# என்ன விளையாட்டு !

ஊதுபத்தியின் அடர்ந்த நறுமணம்
முடை நாற்றத்தில்
மூட்டமிடுகிறது.
கனத்த புகை, சூழலை இருளாக்குகிறது.
நாங்கள் மௌனத்தில்
அஞ்சி இருக்கிறோம்.

பகையரசர் போர்க்களத்தில் சிக்கியுள்ளனர்,
தங்கள் துருப்புச் சீட்டுகளைப் பற்றிப்
பெருமையடித்துக் கொண்டு
அவர்கள் முழங்குகிறார்கள்.

மூப்பின் தளர்ச்சிப் பிடியில் இளைஞர்கள்,
நகரங்களிலும், கிராமங்களிலும்
வாக்குச் சீட்டுக் கடைகள்,
அவர்கள் கோரிக்கையை நிறைவு செய்ய
வேறெதுவும் இல்லை

கபடத்தனம் அணிகிறது
நேர்மையின் முகமூடியை,
வாயாடிக் கொண்டிருக்கும் பொம்மைகளுக்குப் பின்பு
எதிரிகள் தங்கள் கத்தியைக்
கூர்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளப் பெருக்கும் வறட்சியும்
தங்கள் களம் காண்கின்றன.

# ஒரு கறுத்த செய்தியாளன்

கண்களை மூடியவாறு அமர்ந்திருக்கிறேன்
மூடிய கைகளுக்குள் சாம்பல் முகங்கொண்ட
கறுத்த செய்தியாளனாய்க்
காலைச் செய்தித்தாள் விரிந்திருக்கிறது

கண்களைத் திறக்காமலேயே
செய்தித் தாளில் உள்ளதைப்பற்றி
விளக்கமாகச் சொல்ல முடியும்

இன்னாருடைய தலையை வெட்டி எறிவதற்காக
யார், ஏன், எப்பொழுது, எங்கே
பதுங்கி இருக்கிறார்கள்.

பிணக்குவியலில்
கழுகுகளின் கொண்டாட்டத்திற்காக
யாருடைய உடலம் வீசி எறியப்படும்,
எனக்கு எல்லாம் தெரியும்

கண்களை மூடியவாறு அமர்ந்திருக்கிறேன்,
சிவன்தன் அருள் முகத்துடன்
என் முன்பு தோன்றும் பொழுது
என் கண்களை நான் திறப்பேன்.

# சுவடு இல்லை

தாக்கியவன் விட்டுச் சென்ற
தடயங்களின் வழியே
அவனைப் பின் தொடர்ந்தேன்

அவனைக் கையும் களவுமாய்ப்
பிடிக்க முடியும் என்று
உறுதியாய் இருந்தேன்.

கொஞ்சம் அடிகள் போனபின்பு
காய்ந்த மணல்வெளி ஒன்று நீண்டது
அங்குத் தடயங்கள் தெளிவாய் இருந்தன
இனி அவன் தப்பிக்க வழியே இல்லை
திடீரென்று
ஓர் அலை என்கால் அடியில் மோதியது
கண்களை உயர்த்தினேன்,
சுற்றிலும் தண்ணீர்,
கண்கள் பார்க்கும் தொலைவுவரை.

தடயங்களில் எந்த ஒரு சுவட்டையும்
தேடுவது, பயனற்றதாகியது.

# ஓர் அழைப்புக்காகக் காத்திருக்கிறேன்

ஓர் அழைப்புக்காகக் காத்திருக்கிறேன்,
சின்ன தொரு சமிக்ஞை என்றாலும்
புறப்பட ஆயத்தமாக,
ஓர் அழைப்புக்காகப் பொறுமையின்றிக்
காத்திருக்கிறேன்.
காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு
கதவைத் தட்டும் ஓசையைக் கேட்பதற்காகக்
காத்திருக்கிறேன்.

ஓ... அழைப்புக்கான சமிக்ஞை
ஒன்றும் இல்லை
சன்னல் திரைமட்டுமே அசைகிறது
தனதுமடிப்புகளில்

என் சோடிச் செருப்புகளைப் பார்க்கிறேன்.
இப்பொழுதும் அவை
தேய்ந்தொழியாதவையாய்த் தோன்றுகின்றன.
என்னுடைய பருத்தி நூல், மேல்கோட்டு
புதியதுதான்
எரியும் பீடியால் விழுந்த
ஒரு சில குறிகளைத்தவிர,
அழைப்பின் சமிக்ஞைக்காகவே காத்திருக்கிறேன்.
ஆடையுடுத்திக் கணநேரத்தில்
புறப்பட...

# ஓ! இறைவா

கிருஷ்ணா,
நிறுத்து உனது தேரை
நீ எனக்கு கற்பித்த போதனைகள்
காலம் கடந்ததாகிவிட்டன

இந்தக் குருக்ஷேத்திர நரகத்திலிருந்து
என் கால்களைத் தரையில் ஊன்ற விரும்புகிறேன்
பேராசை, குருதி சிந்துதல், போர்
எல்லாம் ஒரு முடிவுக்கு வரட்டும்
உனது அருட்கைகளைப் பிடித்தபடி,
ஓ இறைவா,
ஒற்றுமை, அமைதி,
அன்பு, மீட்சி
எல்லாம் இவ்வுலகுக்குத் திரும்பிவரட்டும்

இந்தப் புனிதநாளில்
துள்ளியாடும் காதல் தெய்வத்தின் புகலிடமான
பிருந்தாவனம்
குருக்ஷேத்திரத்திற்குப்
புதிதாய்ப்பிறந்து திரும்பிவரட்டும்

கிருஷ்ணா
நிறுத்து உனது தேரை
நீ
எனக்குக் கற்பித்த போதனைகள்
காலம் கடந்ததாகிவிட்டன.
தாமரைக் கண்ணா
முன்னோக்கிப்பார்
புதுப்பாதை ஒன்று திறந்திருக்கிறது.

உனது போர்க்களச் சங்கை வீசி எறி
உனது புல்லாங்குழலை ஊது.
மனம் கவரும் உன் பழைய புன்னகையோடு,
உன் முகம் சுடர்வீச
நமதுவாழ்க்கை நிறைவு பெறட்டும்.

போராட்டத்தை இசைப்பது, கவித்துவத்துக்கு ஊறு செய்யாது என்பதற்கு இத் தொகுப்பு ஒரு வங்க மொழிச்சாட்சி. வங்காள மொழியிலிருந்து ஆங்கிலம், ஆங்கிலத்திலிருந்து தமிழ் என்று சொற்கள் மொழிகடந்த போதிலும், பொருள், தன்னை இழந்து விடாமல் நிற்கும் சாத்தியத்தைக் கொண்டுள்ள கவிதைகள் இவை.

**சுபாஷ் முக்யோபாத்யாய்,** (பிறப்பு 1919) மேற்கு வங்கக் கவிஞர்களில் மனங்கவரும் மக்கள் கவிஞர், துறைமுகத் தொழிலாளர்கள் தம் உரிமையை உணர்த்துவதற்காகத் தமது ஆசிரிய வாழ்க்கையைத் தியாகம் செய்தவர்; இரண்டாண்டுகளுக்குமேல் சிறைக்கம்பிகளுக்குப் பின் இருந்தவர்; சணல் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதற்கு எதிராக, அவர்கள் தம் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர். அவருடைய கவிதை வரிகள் பல, புதிய வங்காளத்தில் அன்றாடச் சொற்றொடர்களாகியுள்ளன. தேசிய அளவிலும் அனைத்துலக அளவிலும் பல்வேறு விருதுகளைப் பெற்றவர், சாகித்ய அக்காதெமி, ஞானபீடம் ஆகிய விருதுகள் அடங்கலாக. சுபாஷ் உண்மையான வங்கக் கவிஞர்; ஐரோப்பியக் கவிதைக்கு எந்தவகையிலும் கடன் படாதவர்.

அக்காதெமி விருதுபெற்ற ஜாதாதுரோய் ஜாய் என்ற நூலில் உள்ள சில கவிதைகள் உட்பட நாற்பது கவிதைகள் அடங்கியது இத்தொகுப்பு. இது சுனில் காந்தி சென்னின் ஆங்கில மொழி பெயர்ப்பிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பாளர் சாகுல் அமீது. சென்னை, புதுக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரியும் இவர், **இன்குலாப்** என்ற புனை பெயரால் இலக்கிய வட்டத்தில் சிறந்த கவிஞராக அறியப்படுபவர். மக்கள் விடுதலைக்கான சாதனமாக இலக்கியத்தை வரித்துக் கொண்டவர். இவருடைய முதல் கவிதை மொழி பெயர்ப்பு, இத் தொகுப்பு.

**Naan Pogum Idamellam (Tamil)**
ISBN - 81-260-0838-5 Rs. 50.00

இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும்
சாகித்திய அக்காதெமி உலகிலேயே மிகப் பெரிய வெளியீட்டகம்